## IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

**MCOP No. 196/2013** **Date: 16.03.2023.**

பெயர் - பழனியம்மாள் (**PW**1)

**எதிரிமனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

தற்போது எனக்கு என்ன வயது என்று தெரியாது. மில்லுகுறிச்சிகாட்டுவளவு என்ற ஊர் எங்கு இருக்கிறது என்று தெரியுமா என்றால் தெரியாது. அய்யம்பாளையம் குஞ்சம்பாறை நாங்கள் எத்தனை ஆண்டு காலம் குடியிருந்து வருகிறோம் என்றால் 44 ஆண்டுகளாக குடியிருந்து வருகிறோம். நானும், என்னுடைய கணவரும் 44 ஆண்டு காலமாக அங்கு தான் குடியிருந்து வருகிறோம் என்றால் சரிதான். இந்த விபத்து சமயத்தில் விபத்து வாகனத்தை ஓட்டி வந்தவரின் பெயர் தெரியாது என்றால் சரிதான். என்மீது மோதிய வாகனம் அங்கே நின்றதா அல்லது மோதி விட்டு சென்றதா என்றால் அங்கு தான் நின்றது. எனக்கு குடும்ப அட்டை அய்யம்பாளையத்திற்கு பாத்தியப்பட்ட பனங்காட்டுரில் தான் உள்ளது. அங்குதான் 44 ஆண்டு காலமாக ரேஷன் பொருட்களை வாங்கி வருகிறோம். என்னுடைய வாக்காளர் அடையாள அட்டை அய்யம்பாளையத்தில்தான் உள்ளது நாங்கள் அய்யம்பாளையத்திற்கு பாத்தியப்பட்ட பட்டையங்காளிபாளையத்தில் ஓட்டு போடுவோம் என்றால் சரிதான். எனதுகணவர் இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கு ஓட்டுனர் உரிமம் வைத்துள்ளரா என்றால் வைத்துள்ளார். அதை நீதிமன்றத்திற்கும் தற்போது கொண்டு வந்துள்ளார். என்னுடைய கணவர் எடுத்து வந்த வாகனத்திற் விபத்தின்போது காப்பீடு இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது கணவருக்கு விபத்தின் போது 75 வயது ஆகும். நாங்கள் கரும்பு வெட்டும் வேலை செய்து வந்தோம் என்றால் சரிதான். கரும்பு வெட்டினால் ஒரு டன்னுக்கு கணக்கீடு செய்து பணம் கொடுப்பார்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்த சாலை கிழமேல் சாலை ஆகும். சம்பவம் மாரப்பன்பாளையம் பிரிவில் நடந்தது. குஞ்சம்பாறைக்கு செல்லவேண்டும் என்றால் மேற்படி கிழமேல் சாலையில் குறுக்காக கடந்து வடக்கு நோக்கி செல்லவேண்டும் என்றால் சரிதான். சம்பவத்தின்போது தங்கள் குஞ்சம்பாறைக்குதான் சென்றோம் என்றால் சரிதான். சம்பவத்தின்போது நாங்கள் கிழமேல் சாலையை குறுக்காக கடந்தோம் என்றால் சரியல்ல. குறுக்காக கடப்பதற்காக சாலையில் வாகனம் வந்ததால் நான் வண்டியை விட்டு கீழே இறங்கி வண்டியை பிடித்துக்கொண்டு இருந்தேன். என்கணவர் வண்டியில் உட்கார்ந்து இருந்தார். அப்போதுதான் இந்த விபத்து நடந்தது. விபத்து சம்பந்தமாக போலிசார் விசாரித்தார்களா என்றால் விசாரிக்கவில்லை. சம்பவம் நடக்கும்போது காலை 11 மணிக்கு குறைவாகதான் இருக்கும். சம்பவத்தின்போது நான் வண்டியை

பிடித்துக்கொண்டு நின்றதாகவும், என்கணவர் வண்டியில் இருந்ததாகவும் என்னுடைய முதன்மை சாட்சிய பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளேனா என்றால் என்னுடைய வழக்கறிஞரிடம் அவ்வாறு தான் சொன்னேன். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் ரோட்டை கடப்பதற்காக வேகத்தை குறைந்தபோது விபத்து நடந்ததாக கூறியிருந்தால் அது தவறா என்றால் அது பற்றி தெரியவில்லை. ஆனால் நான் இறங்கி நின்றபோது தான் இரண்டு பேரையும் அடித்து புளியமரத்திற்கு அருகில் தூக்கி வீசப்பட்டது. கவுந்தம்பாடி அரசு மருத்துவமனைக்கு காலை 11 மணிக்கு சென்றுவிட்டோம் என்றால் சரிதான். கவுந்தம்பாடி அரசு மருத்துவமனையிலிருந்து ஈரோடு அரசு மருத்துவமனைக்கு சென்றுவிட்டு பின்னிட்டுதான் பவானி பி.ஜி.ஆர் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வந்தோம். எனக்கு கையில் காயம் ஏற்பட்டதாக கூறுவதற்கு எக்ஸ்ரோ எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். (சாட்சி கை மணிகட்டில் ஏற்பட்ட எலும்பு முறிவு என்றார்). எனக்கு ஏற்பட்ட கையில் எலும்பு முறிவிற்கு கேஓயர் பொருத்தப்பட்டுள்ளது எனவும், தகடு மற்றும் திருகணி பொருத்தப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. எனக்கு மருத்துவசெலவு ரூ. 1,00,000/-ஆனதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ பில்கள் இவ்வழக்கிற்காக தயார் செய்யப்பட்டவை என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்த ம.சா.ஆ.12 ஆதார் அட்டையில் எனது வயது 70 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். கோபிசெட்டிபாளையம் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். மேற்படி வழக்கின் 1-ஆம் எதிர்மனுதாரர்மீது குற்றம் இல்லை என்று கூறி அவர் விடுதலை செய்யப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியாது. பெயர் தெரியாத வாகனம் அடித்து எனக்கு 02.05.2012-ஆம் தேதி ஏற்பட்ட காயத்திற்கு அனுமனத்தின் எதிர்மனுதாரர்களின் வாகனம் தான் மோதி இருக்கும் என்று சொல்லி பொய்யான வழக்கும், பொய்யான இந்த மனுவும் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. சம்பவம் நடந்தது மே மாதம் 2- ஆம் தேதி என்றால் சரிதான். சம்பவம் நடந்தது எத்தனை நாட்கள் கழித்து புகார் கொடுத்தோம் என்றால் நான் மருத்துவமனையில் இருந்ததால் அந்த விவரம் தெரியவில்லை. நான் 2-ஆம் தேதியே பவானி பி..ஜி.ஆர் மருத்துவமனையில் சிசிக்சைக்கு சேர்ந்துள்ளேன் என்றால் எனக்கு தேதி ஞாபகம் இல்லை. இந்த விபத்தானது 1- ஆம் எதிர்மனுதாரரின் அஜாக்கிரதையால் ஏற்படவில்லை எனவும், இந்த வாகனமும் விபத்தில் சம்பந்தப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்நீதிமன்றத்தில் இம்மனுவினை தாக்கல் செய்வதற்கு ஆள்வரை இல்லை என்று சொன்னால் சரியல்ல. இம்மனு

எந்தவிதத்திலும் நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. இம்மனு தள்ளுபடி செய்யதக்கதல்ல என்று சொன்னால் சரிய்லல. நான் என்னுடைய மனுவிலும், முதன்மை பிரமாண வாக்குமூலத்திலும் கூறியுள்ளதுபோல் எனக்கு எந்தவித நிரந்தர ஊனமும், வருமான இழப்பும் ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிர்கால மருத்துவ செலவினம் கோர இயலாது என்று சொன்னால் சரியல்ல. 1, 2 எதிர்மனுதாரர்கள் எந்தவிதத்திலும் நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டவர்கள் அல்ல என்று சொன்னால் சரியல்ல.

ஒம்/- பழனியம்மாள்

Sd/- S. Uma Maheswari,
Subordinate Judge, Sankari